3924/20

103

# நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

**நடவடிக்கை கடிதம் எண்: 4030/2018 தம3** நாள்: **06.06.2019**

12 JUL 2019
ஒன்றிய அலுவலகம் குத்தாலம்-609 801

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்புதுணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - நாகப்பட்டிணம் மாவட்டம் - குத்தாலம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - பண்டாரவாடை ஊராட்சி மற்றும் கிராமம் - நி.அ.எண்கள்: 140/2pt; 141/1,2Apt,2B,3,4-ல் 275020.20ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2நாள்: 30.10.2017, 31.10.17, 07.11.17,17.11.17 மற்றும் 20.12.17
4. அரசாணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 05.02.2019
5. மனுதாரர் திரு.V.கார்த்திகேயன், அவர்களின் விண்ணப்பம் நாள்: 25.09.2018

---

**உத்தரவு:-**

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (5)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலணை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாகப்பட்டிணம் மாவட்டம், குத்தாலம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், பண்டாரவாடை ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: 140/2pt; 141/1,2Apt,2B,3,4-ல் 275020.20ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 324/2019** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 275020.20 ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 74

விற்கப்பட்ட மனை எண்கள்: 3-5,10-13,15-18,20-27,30-40,42-66,69-81, 83-86,90,94

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 18

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1,2,6,9,14,19,28,29,41,67,68,82,87-89, 91-93

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 45618.80ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 4598.00ச.அடி (10.08%)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:**

1) **பரிசீலணைக் கட்டணம்:**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்குரு.500/- வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | Registration Slip No.DTCP/L/0441572/2017-ல் மனை எண்கள்: 1,2,6-9,14,19,28,29,41, 67,68,82,87-89,91-93-ற்கு அனைத்து மனைகளுக்கும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலணைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

2) **வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:** (உதாரணமாக)

கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறை கோரி 04.11.2018 முதல் பெறப்படும் விண்ணப்பத்திற்கு பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 29 | 222.96 | 222.96 X 30 = ரூ.6689/- | 222.96 X 25 = ரூ.5574/- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularisation Charges of Unapproved Layouts and Plots –DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation**<br>**(DPC: 0217 60 800 AT 2730)** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விபரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

204



பார்வைகள்:

1. அரசாணை (நிலை)எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,தஞ்சாவூர்.
06/06/19

இணைப்பு:

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர்:

வட்டார வளர்ச்சி அலுவலர்,
குத்தாலம் ஊராட்சி ஒன்றியம்,
குத்தாலம் வட்டம்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.

நகல்:

1. திரு.V.கார்த்திகேயன்,
   A3, ராம்ஸ் வெண்ணிலா அப்பார்ட்மென்ட்,
   வெண்ணிலா நகர்,
   பாண்டிச்சேரி.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   மாவட்ட ஆட்சியரகம்,
   நாகப்பட்டிணம் மாவட்டம்.
3. உதவி இயக்குநர்,
   நில அளவை பதிவேடு துறை,
   மாவட்ட ஆட்சியரகம்,
   நாகப்பட்டிணம் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   குத்தாலம் வட்டம்,
   நாகப்பட்டிணம் மாவட்டம்.

   (3, 4) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
5. 2 எண் இணை சார்பதிவாளர்,
   2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
   குத்தாலம்,
   நாகப்பட்டிணம் மாவட்டம்.

   சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
6. தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு

205

குத்தலாம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி.ஆ.சுமதி

ந.க.எண்:1764/2021/ஆ4

நாள்: 01. 12.2021.

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் - பண்டாரவாடை ஊராட்சி - நில அளவை எண்கள் 140/2pt, 141/1, 2Apt, 2B, 3, 4-இல் விற்கப்படாத மனைப்பிரிவின் பரப்பளவு 41020.80 ச.அடியில் 3811ச.மீ பரப்பளவில் அமையும் கிளிண்டன் கார்டன் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்திட கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது வரைமுறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டது – வரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 4030/2018/தாம3 நாள்: 06.06.2019.
2. அரசாணைஎண்:78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017.
3. அரசாணை எண்:172 வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:13.10.2017.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைந.க.எண்:13193/2017/LA2, நாள்:30.10.2017,31.10.2017,07.11.2017,17.11.2017மற்றும் 20.12.2017.
5. இவ்வலுவலக ந.க.எண்: 1764/2021/ஆ4 நாள்:17.11.2021.
6. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

*****************

ஆணை:

நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் பண்டாரவாடை ஊராட்சி நில அளவை எண்கள்: 140/2pt, 141/1, 2Apt, 2B, 3, 4-இல் விற்கப்படாத மனைப்பிரிவின் பரப்பளவு 45618.80ச.அடியில் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பு 4598ச.அடி போக மீதமுள்ள பரப்பளவு 41020.80 ச.அடிக்கு 3811ச.மீ பரப்பளவில் அமையும் கிளிண்டன் கார்டன் மனைப்பிரிவில் அமையும் மனை எண்கள்: 1, 2, 6, 9, 14, 19, 28, 29, 41, 67, 68, 82, 87, 88, 89, 91, 92, 93 பார்வை (1) –இல் காணும் செயலாணையின் மூலம் கீழ்காணும் நிபந்தனைகளுடன் வரன்முறை செய்துகொள்ள கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

Block Development Officer (V.P.)
KUTTALAM

<u>நிபந்தனைகள்</u>

நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைஅல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் வரன்முறை செய்து உத்தரவிடப்பட்ட ஆணைகள் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

பார்வை (1) -,ல் காணும் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, உரிய தலைப்புகளில் வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| வரைமுறைப் படுத்தும் கட்டணம் | 3811 ச.மீ வீதம் மனைப் பிரிவுகள்X ரூ.45/- | கட்டணம் ரூ.1,71,495/- | கணக்குதலைப்பு 0217 Urban Development.60 Other Urban Development Scheme 800 other Receipts. AT Receipts Under Regularisation Charges of Unapproved.Layouts and Plots DTCP.27 Non Taxation Fees-30 Regularisation (DPC:0217 60800AT 2730). | செலுத்து சீட்டுநாள்: 24.11.2021. எண் 20211122828836 |
| வளர்ச்சி கட்டணம் | 3811 ச.மீ வீதம் மனைப்பிரிவுகள் X ரூ25/- | கட்டணம் ரூ.95,275/- | மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் வரைவோலை எண். 819799/ 23.11.2021 | செலுத்தப் பட்டநாள்: 23.11.2021. |
| கொடிநாள் நிதி | - | ரூ.1000/- | IOB குத்தாலம் 004501000024614 | செலுத்தப்பட்டநாள்: 23.11.2021. |

எனவே, கிளிண்டன் கார்டன் 41020.80ச.அடிக்கு 3811ச.மீ மனைப்பிரிவினை கீழ்க்கண்ட விபரப்படி வரன்முறைசெய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(தொடர்ச்சி-3-)

Block Development Officer, (V.Pts)
KUTTALAM

206

மேலும் வளர்ச்சி கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.25/- (இருபத்தைந்து மட்டும்) வீதம் ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்த பரப்பளவிற்கு கணக்கீடு செய்து அத்தொகையினை மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து அதனை இவ்வலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும்.

3. கொடிநாள் நிதி ரூ.1000/- IOB குத்தாலம் வங்கி கணக்கு எண்: (004501000024614)-ல் செலுத்தி செலுத்துச்சீட்டு நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

| வ.எண் | விபரம் | மனை எண்கள் | பரப்பு | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை(சதுரமீட்டர்) | கூடுதல்தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | வரன்முறை கட்டணம் | 1,2,6,9,14, 19,28,29, 41,67,68, 82,87,89, 91-93 | 41020.80 ச.அடி | 3811 X45 | 1,71,495/- |
| 2 | வளர்ச்சி கட்டணம் | | 41020.80 ச.அடி | 3811 X25 | 95,275/- |
| 3 | கொடிநாள் நிதி | | | 1000 | 1000/- |

மேற்காணும் விபரப்படி வளர்ச்சிக்கட்டணம், வரன்முறைக்கட்டணம் ஆகியவைகளை செலுத்தியதற்கான ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்தபின் மனை எண்கள்: 1,2,6,9,14,19,28,29,41,67,68,82,87,89, 91-93 -ஐ வரன்முறை செய்து உத்தரவு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

வட்டாரவளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
குத்தாலம்.
17/11/21

நகல்:
1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மயிலாடுதுறை
2.சார்பதிவாளர் நிலை I குத்தாலம் - தகவலுக்காக.